வலிகாமம் கிழக்கு பிரதேசசபை

யாழ்ப்பாண மாவட்டம்

---------------------------------

1. நிதிக் கூற்றுக்கள்

------------------------------

1.1 நிதிக் கூற்றுக்களைச் சமர்ப்பித்தல்

-----------------------------------------------------

மீளாய்வாண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2013 ஏப்ரல் 10 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்ததுடன் முன்னைய ஆண்டிற்கான நிதிக் கூற்றுக்கள் 2012 ஏப்ரல் 04 இல் கணக்காய்விற்காக சமர்ப்பிக்கப்பட்டிருந்தது. ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை 2013 செப்ரெம்பர் 23 இல் சபையின் தவிசாளருக்கு வழங்கப்பட்டது.

1.2 அபிப்பிராயம்

--------------------

எனது கணக்காய்வின் மூலம் தென்படுவதும் எனக்கு கிடைக்கப் பெற்ற சிறந்த தகவல்கள் மற்றும் வழங்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய வலிகாமம் கிழக்கு பிரதேசசபை 2012 டிசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்காக முறையான கணக்குப் பதிவேடுகள் பேணி வருவருவதுடன் தவிசாளருக்கு என்னால் வழங்கப்பட்ட அறிக்கையில் நிதிசார் கூற்றுக்களில் ஏற்படுத்தப்பட்ட தாக்கங்களை தவிர கணக்கீட்டு நியமங்களின்படி வலிகாமம் கிழக்கு பிரதேச சபையின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிலைவரத்தையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் செயற்பாட்டின் நிதிசார் விளைவுகளையும் காசோட்டத்தையும் உண்மையாகவும் நியாயபூர்வமாகவும் பிரதிபலிக்கும் வகையில் நிதிக் கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என்பது எனது அபிப்பிராயமாகும்.

## 1.3 நிதிக் கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

### 1.3.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

நிதிக் கூற்றுக்களில் அவதானிக்கப்பட்ட கணக்கீட்டுக் குறைபாடுகள் வருமானங்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பில் பின்வரும் அட்டவணையில் காட்டப்படுகின்றன.

| நிதிக் கூற்றுக்கள் மீதான தாக்கம் | வருமானங்கள் | | பொறுப்புக்கள் | |
|---|---|---|---|---|
| | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா | சந்தர்ப்பங்களின் எண்ணிக்கை | பெறுமதி ரூபா |
| குறைத்துக் கூறல்கள் | 02 | 15,200 | - | - |
| அதிகரித்துக் கூறல்கள் | | | 01 | 59,436 |

### 1.3.2 கணக்காய்விற்கான சான்றுகளின்மை

தேவையான தகவல்கள் கணக்காய்விற்குச் சமர்ப்பிக்கப்படாமையால் ரூபா 91இ482இ924 பெறுமதியுடைய 25 கொடுக்கல் வாங்கல்களை கணக்காய்வின்போது சான்றுறுதிப்படுத்த முடியாதிருந்தது

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் விளைவுகள்

சமர்ப்பிக்கப்பட்ட நிதிக்கூற்றுக்களின்படி மீளாய்வாண்டிற்கான சபையினுடைய நிதிப்பெறுபேறுகள் வருமானத்திலும் கூடிய செலவினமாக ரூபா 829இ098 விளைந்திருப்பதுடன் நேரொப்பான முன்னைய ஆண்டுடன்

ஒப்பிடும் போது செலவிலும் கூடிய வருமான மிகையாக ரூபா 2இ833 விளைந்திருந்தது.

2.2 நிதிசார் கட்டுப்பாடு

---------------------------

பாதீட்டு மதிப்பீடானது சரியான முறையில் தயாரிக்கப்படாமையால் பாதீட்டு வருமானத்திற்கும் உள்ளவாறான வருமானத்திற்கும் இடையே ரூபா 9இ122இ541 வேறுபாடு ஏற்பட்டதுடன் பாதீட்டு செலவினத்திற்கும் உள்ளவாறான செலவினத்திற்கும் இடையே ரூபா 10இ706இ517 வேறுபாடு ஏற்பட்டுள்ளமை கணக்காய்வில் அவதானிக்கப்பட்டுள்ளது.

2.3 வருமான நிர்வாகம்

--------------------------------

2.3.1 மதிப்பிடப்பட்ட வருமானம் உள்ளபடியான வருமானம், நிலுவை வருமானங்கள்

---------------------------------------------------------------------------------------------------------------

தவிசாளரினால் சமர்ப்பிக்கப்பட்டவாறு மீளாய்வாண்டு தொடர்பான மதிப்பிடப்பட்ட வருமானம், உள்ளபடியான வருமானம் நிலுவை வருமானங்கள் மீதான தகவல்கள் கீழே தரப்பந்துள்ளன.

.

| வருமான விடயம் | மதிப்பிடப்பட்டது | உள்ளபடியானது | திசெம்பர் 31 இல் உள்ளவாறான திரண்ட நிலுவைகள் |
|---|---|---|---|
| | ரூபா 000 | ரூபா 000 | ரூபா 000 |
| இறைகளும் வரிகளும் | 598 | 637 | 5,146 |
| குத்தகை வாடகைகள் | 7,625 | 7,807 | 03 |
| அனுமதிப்பத்திரக் கட்டணங்கள் | 1,650 | 2,351 | - |
| வேறு வருமானங்கள் | 41,992 | 31,948 | 38,386 |

2.3.2 வருமான முகாமைத்தும்

--------------------------------------

i. கடந்த 5 வருடங்களுக்கு மேலாக அறவிடப்படாத 3,362,977 உட்பட ரூபா.5இ182இ029 பெறுமதியான வீதவரி நிலுவையை அறவிடுவதற்கு சபையினால் ஆக்கபூர்வமானதும் சட்ட ரீதியானதுமான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

ii. மீளாய்வாண்டில் சபை எல்லைக்குட்பட்ட 220 எண்ணிக்கையான கடைகளில் உரிமக் கட்டண அறவீடு மேற்கொள்ளப் பட்டிருக்காமையால் சபைக்கு வருமான இழப்பு ஏற்பட்டுள்ளது.

2.3.3 நீதி மன்றக் குற்றப் பணங்களும் தண்டப்பணங்களும்

------------------------------------------------------------------------------------

i. வேவ்வேறு கட்டளைச் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றிலிருந்து மீளாய்வாண்டில் பெறப்பட வேண்டிய ரூபா 1,914,521 பெறுமதியான நீதிமன்றக் குற்றப்பணங்களும் அறிக்கையிடும் திகதி வரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

ii. 2010 – 2012ம் ஆண்டு காலப்பகுதியில் காணிப்பதிவாளர் நாயகத்திடமிருந்து பெறப்பட வேண்டிய முத்திரைத்தீர்வைக் கட்டணங்கள் ரூபா.35இ067இ681 வருமானமாக அறிக்கையிடும் திகதிவரையும் அறவிடப்பட்டிருக்கவில்லை.

2.4 சொத்துக்களின் முகாமைத்துவம்

----------------------------------------------------

2.4.1 பயன்படுத்தப்படாத மற்றும் குறைப்பயன்பாட்டிற்கு உட்பட்ட பௌதீக வளங்கள்

------------------------------------------------------------------------------------------------------------------------

i. சபையில் பின்வரும் பொருட்கள் பயன்பாடின்றி காணப்படுகிறது.

| பொருள் வகை | எண்ணிக்கை |
|---|---|
| காலணி | 21 சோடி |
| புல்லு வெட்டி | 57 |
| மண்வெட்டி | 108 |
| ஸ்கானர் | 02 |

ii. சபையின் 68 எண்ணிக்கையான பொருட்கள் பாவனைக்கு உதவாது பயன்பாடின்றி காணப்படுவது இருப்புக் கணிப்புச் சபை அறிக்கை மூலம் அவதானிக்கப்பட்டுள்ளது.

விபரம் வருமாறு:

| அலுவலக விபரம் | பாவனைக்கு உதவாத பொருள்களின் எண்ணிக்கை |
|---|---|
| உரும்பிராய் உப அலுவலகம் | 04 |
| கோப்பாய் உப அலுவலகம் | 02 |
| புத்தூர் தலைமை அலுவலகம் | 36 |
| புத்தூர் உப அலுவலகம் | 10 |
| அச்சுவேலி | 09 |
| நீர்வேலி | 07 |
| | 68 |

2.5 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் இணக்கமின்மை

பின்வரும் சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்களுடன் பின்வரும் இணங்காமைச் சந்தர்ப்பங்கள் கணக்காய்வில் அவதானிக்கப்பட்டன.

| சட்டங்கள் விதிகள் மற்றும் நிதிப்பிரமாணங்களுடனான தொடர்பு | விபரம் |
|---|---|
| (அ) 1988 ம் ஆண்டின் நிதி நிர்வாக ஒழுங்கு விதி | |
| (i) அத்தியாயம் III பிரிவு 29 | சேகரிப்புக்கள் நாள்தோறும் வங்கியில் வைப்புச் செய்ய வேண்டுமென்ற போதும் உப அலுவலகம் |

| | |
|---|---|
| | நீர்வேலியில் 2012.02.09ம் திகதி சேரிக்கப்பட்ட பணம் ரூபா 3இ553 ஆனது 2012.03.02ம் திகதிவரை வங்கியில் வைப்பு செய்யப்பட்டிருக்கவில்லை. |
| (ஆ) <u>இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் நிதி ஒழுங்கு விதி</u> | |
| (i) நிதி ஒழுங்கு விதி இலக்கம் 571 | இரண்டு வருடங்களுக்கு மேற்பட்ட ரூபா 3,499 பெறுமதியான வைப்புக்கள் தொடர்பாக நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்ப ட்டிருக்கவில்லை. |
| (ii) நிதி ஒழுங்கு விதி 234 | 6 மாதத்திற்கு மேற்பட்ட ரூபா 4,500 பெறுமதியான 164250 இலக்க காசோலை தொடர்பாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. |
| (இ) 2002ம் ஆண்டின் 14ம் இலக்க பெறுமதி சேர் வரிச்சட்டம் | 2009 - 2012ம் ஆண்டுகளில் அறவிடப்பட்ட ரூபா 130இ006 பெறுயான பெறுமதி சேர் வரியானது உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப் பட்டிருக்கவில்லை. |
| (ஈ) 2006 ம் ஆண்டின் 10ம் இலக்க உள்நாட்டு இறைவரிச் சட்டம் | 2011ம் ஆண்டில் அறவிடப்பட்ட பிடித்து வைத்தல் வரி ரூபா 4,336 உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு செலுத்தப்பட்டிருக்கவில்லை. |

2.6 முறையற்ற கொடுப்பனவு

-----------------------------------------

இறுதிக் கணக்குகள் தயாரித்தல் மற்றும் பாதீடு தயாரிப்பது சபையின் நாளாந்த செயற்பாடுகளாக காணப்படுகின்றபோதும் மீளாய்வாண்டில் குறித்த கடமைகளுக்கு சபை ஊழியருக்கு ரூபா 43,916 மேலதிக நேர கொடுப்பனவு வழங்கப்பட்டிருப்பது சிக்கனமற்ற கொடுப்பனவாக அவதானிக்கப்பட்டுள்ளது.

2.7 ஒப்பந்த நிர்வாகம்

2.7.1 அங்கீகாரமற்ற மூலதன வேலைகள்

மீளாய்வாண்டின் சபையின் வரவு செலவுத் திட்டத்தினால் அங்கீகரிக்கப்படாத வேலைத் திட்டமாகிய அச்சுவேலி மரக்கறி சந்தை கட்டிட வேலைத் திட்டத்திற்கு சபைநிதி மூலம் ரூபா 1,117,637 செலுத்தப்பட்டிருந்தமை அங்கீகாரமற்ற வேலைத் திட்ட கொடுப்பனவாகும்.

2.7.2 முற்றாக கைவிடப்பட்ட வேலைத்திட்டம்

சபையின் மீளாய்வாண்டின் இறுதியில் வங்கி மீதியாக ரூபா 6இ908இ324 காணப்படுகின்ற போதும் நடைமுறையாண்டில் நிறைவேற்றவென வரவு செலவு திட்டத்தில் அங்கீகரிக்கப்பட்ட இரண்டு சபை வேலைகள் ரூபா 3இ650இ000 பெறுமதியானவை முற்றாக கைவிடப்பட்ட நிலையிலுள்ளது.

விபரம் வருமாறு:

| கைவிடப்பட்ட வேலைத் திட்டம் | ஒதுக்கீட்டு நிதி ரூபா |
|---|---|
| மின்சார மயான அறை | 2,000,000 |
| வீதி வேலைகள் | 1,650,000 |
| | 3,650,000 |

2.8 செயற்பாடு மற்றும் முகாமைத்துவப் பலவீனம்

உள்;ராட்சி ஆணையாளரின் 2010ம் ஆண்டின் சபையின் தொழிற்பாட்டு விருத்திக்காக வழங்கப்பட்ட நன்கொடை ரூபா 240,674 பயன் பாடின்றி சபையின் வைப்புக் கணக்குகளில் உள்ளடக்கப்பட்டிருப்பது மக்களுக்கு கிடைக்க வேண்டிய நலன்புரி நன்மைகளை பெற முடியாதுள்ளமையை காட்டுகின்றது.

2.9 உள்ளகக் கணக்காய்வு

-------------------------------------

சபையில் போதியளவு உள்ளகக் கணக்காய்வு மேற்கொள்ளப் பட்டிருக்கவில்லை.

3. முறைமைகளும் கட்டுப்பாடுகளும்

-----------------------------------------------------

பின்வரும் முறைமைகள் கட்டுப்பாடு பகுதிகளில் விசேட கவனம் தேவைப்படுகின்றது.

i. வருமானசேகரிப்பு
ii. நன்கொடை
iii. நானாவித வைப்பு
iv. வரவு செலவுத் திட்ட கட்டுப்பாடு.